<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 749/2023</u>
<u>வழக்கு சாட்சி PW–11</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தாலுகா | : | மதுரை |
| தந்தை பெயர் | : | பவானந்தம் | தொழில் | : | ஆய்வாளர் |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 01st, 2025.

**(4ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் முறப்ப நாடு காவல்நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் ஆழ்வார்க்குறிச்சி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, திரு.கண்ணப்பன் என்பவர் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக 20.09.2022 அன்று சிகிச்சையில் இருந்தபோது, முதல்நிலைக்காவலர் திரு.ஷெரிப் என்பவர் சிகிச்சையில் இருந்த கண்ணப்பனிடம் வாக்குமூலம் பதிவு செய்து நிலைய குற்ற எண்.183/2022, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 307, 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார். நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

20.09.2022ம் தேதி, மாலை 06.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் லெட்சுமணப்பெருமாள் மற்றும் சுப்பையா ஆகியோர் முன்னிலையில் ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். (பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.) மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7 ஆகும்.**

பின்னர், அன்றைய தினமே சாட்சிகள் வெட்டும்பெருமாள், முருகன், சு.முருகன், ராமச்சந்திரன், ப.முருகன், கிருஷ்ணன், வைரம்மாள், ஆறுமுகக்கனி, மரகதம், உஷாதேவி மற்றும் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த முதல்நிலை காவலர் ஷெரிப் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 26.09.2022 அன்று சுமார் 12.00 மணியளவில் வழக்கின் எதிரி அண்ணாமலையை ஆலங்குளம் – அம்பாசமுத்திரம் செல்லும் ரோட்டில் கடையம் ராம்நகர் விலக்கில் வைத்து கைது செய்து, சாட்சிகள் லெட்சுமணன் மற்றும் ரமேஷ்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய வாகனம் TN–49–H–1113 என்ற டொயாட்டா குவாலிஷ் வாகனம் மற்றும் வாகனத்தில் இருந்த அரிவாள், கம்பு ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 13.30 மணிக்கு அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். TN–49–H–1113 என்ற டொயாட்டா குவாலிஷ் வாகனம் – **சா.பொ.3** ஆகும். சாட்சிகள் லெட்சுமணன், ரமேஷ்கண்ணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 27.09.2022 அன்று சுமார் 15.30 மணியளவில் வழக்கின் எதிரி ஜெயராணியை பொட்டல்புதூர் – இடைக்கால் செல்லும் ரோட்டில் மயிலப்பபுரம் விலக்கில் உள்ள பஸ்ஸ்டாப் முன்பு வைத்து காவலர் இசக்கிஉமா உதவியுடன் கைது செய்து 16.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

இவ்வழக்கின் மற்ற எதிரிகளான வேல்ச்சாமி என்ற எம்.எல்.ஏ கண்ணன், மாணிக்கம் என்ற முத்துக்குமார் ஆகியோர்களை 20.10.2022 ம் தேதி, பொட்டல்புதூர் – முக்கூடல் மெயின்ரோட்டில் வெள்ளிக்குளம் பஸ்ஸ்டாப் அருகில் வைத்து கைது செய்தேன். வேல்ச்சாமி என்ற எம்.எல்.ஏ கண்ணனை எவ்வித அச்சுறுத்தலுமின்றி சாட்சிகள் ராஜீவ்காந்தி, ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் இருவரையும் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், 29.11.2022 அன்று இவ்வழக்கின் காயம்பட்ட புகார்தாரர் கண்ணப்பனுக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர்.கேப்சிபா டெல்பின் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 120(பி), 294(பி), 307, 506(2) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல்தகவல்அறிக்கையில் வழக்கு சம்பவம் 19.09.2022 அன்று இரவு 08.00 மணிக்கு நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு மறுநாள் 20.09.2022 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சிமெண்ட் நிறம் போல் காட்சியளித்த சுமோ போன்ற வாகனத்தில் வந்த பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடம் இராவுத்தர்பேரி ரோட்டில் இந்திரா நகர் மேல்புறம் கேரளா தோட்டம் அருகில் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பு புகார்தாரரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து கண்ணுற்ற சாட்சிகள் வேறு இல்லை என்றால் சரிதான்.

இராவுத்தர்பேரி ரோட்டில் நிறைய கேரளாக்காரர்கள் தோட்டம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சம்பவயிடத்தை எனக்கு யார் அடையாளம் சொன்னார்கள் என்றால் சாட்சிகளை விசாரித்ததில் தெரிய வந்தது. பார்வை மகஜர் தயார் செய்வதற்கு முன்பு சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இராவுத்தர்பேரி ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். அந்த இடத்தில் தெரு விளக்கு இல்லை என்றால் சரிதான். வரைபடத்தை நான் தான் தயார் செய்தேன். புகார்தாரரை சம்பவத்திற்கு மறுநாள் மாலை 08.00 மணிக்கு மேல் விசாரித்தேன்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் விசாரணை மேற்கொண்டேன். எதிரிகளுடைய பெயர், விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் சாட்சிகள் எதிரிகளின்

பெயர், விபரம் எவ்வாறு தெரிந்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ளார்களா? என்றால் சொல்லியுள்ளார்கள். எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு புகார் கொடுத்ததாக சாட்சிகள் சொல்லவில்லை. அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை. புகார்தாரர் இந்த வழக்கில் தன்னுடைய செல்போன் எண்ணை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் சம்பவத்திற்கு 2 நாட்கள் முன்பிருந்தே ஒரு குறிப்பிட்ட எண்ணிலிருந்து தெரியாத ஒரு நபர் போன் செய்து ஐந்தாம்கட்டளையில் தன்னுடைய தங்கச்சி சடங்கிற்கு டெக்கரேசன் செய்ய வேண்டும் என்று அழைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த நாள் புகார்தாரரை அழைத்ததாக சாட்சிகள் சொல்லியுள்ளார்களா? என்றால் சொல்லியுள்ளார்கள். புகார்தாரருக்கு குறிப்பிட்ட போன் நம்பரிலிருந்து போன் வந்ததா? என்பது வழக்கு விசாரணையின் முக்கியமான பகுதி என்றால் சரிதான். புகார்தாரரின் செல்போனை கைப்பற்றி, அந்த நம்பரிலிருந்து போன் வந்ததா? என நான் பார்த்தேன். அது பற்றிய விபரங்கள் வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான்.

சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அ.சா.5 உஷாதேவியின் செல்போனுக்கு 4ம் எதிரி போன்செய்து "உங்களுடைய அண்ணனை நான் ஆள் வைத்து கொல்லாமல் விடமாட்டேன்" என்று சொன்னதாக சாட்சியின் விசாரணையில் என்னிடம் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த போனை நான் வழக்கில் ஆஜர்படுத்தவில்லை. 4ம் எதிரி சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரிதான். முன்விரோதமாக

இடப்பிரச்சனை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார், யாருக்கிடையே இடப்பிரச்சனை இருந்தது என்று என்னுடைய விசாரணையில் தெரிய வந்தது. புகார்தாரருக்கும், 4 வது எதிரிக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 4 ம் எதிரியை சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் நாங்கள் இந்த வழக்கில் இணைத்தோம். 4 வது எதிரிக்கும், இதர எதிரிகளுடன் தொடர்பு இருந்ததாக சாட்சிகள் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி அண்ணாமலை சொல்லியுள்ளார். மாற்று அறிக்கை இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்தோம்.

1 ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் வாக்குமூலம் பதிவு செய்து, 6 நாட்கள் கழித்து பதிவு செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்திற்கு முன்பே 4 ம் எதிரியை இந்த வழக்கில் இணைத்துள்ளேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற பிரிவு மாறுதல் அறிக்கையை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 வது எதிரி அ.சா.1 டம் சம்பவத்தின் போது, அவருடைய வாகனத்தை மறித்து ஸ்குரூ டிரைவ் கேட்டதாக விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3 நபர்களில் ஒருவர் கம்பால் அடித்ததாக புகார்தாரர் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பின்னர், அரிவாளால் வெட்டியதாக கூறியுள்ளார் என்றால் முதலில் தான் அரிவாளால் வெட்டப்பட்டதாக கூறியுள்ளார். புகார் வாக்குமூலத்தில் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல.

புகார் வாக்குமூலத்தில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு, எதிரிகள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால்

சரிதான். சம்பவயிடத்திற்கும், இராவுத்தர்பேரிக்குமிடையே 5 கி.மீ தூரம் இருக்கும். சம்பவயிடத்திலிருந்து புகார்தாரர் ஓடிப்போய், மாடக்கண்ணு மகன் முருகன் என்பவரிடம் சம்பவத்தை குறித்து சொன்னதாக வழக்கு ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். மாடக்கண்ணு மகன் முருகனை இந்த வழக்கில் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு, வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக சம்பவயிடத்திற்கு போலீசார் சென்றதாக சாட்சிகள் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அத்தாட்சிப்படி, நான் கைப்பற்றிய வாகனத்தின் கலர் என்ன என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ராம்நகர் விலக்கு நாலுமுக்கு சந்தி என்றால் சரிதான். அந்த இடத்தில் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திலுள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் லெட்சுமணன், ரமேஷ்கண்ணன் புகார்தாரரின் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. மருத்துவரிடம் ஆயுதத்தை காண்பித்து விசாரித்தேன். வாகனத்தின் புகைப்படத்தை புகார்தாரரிடம் காண்பித்து விசாரித்தேன். இது குறித்து வழக்கு ஆவணங்களில் துலங்காது என்றால் சரிதான். புகார்தாரருக்கு ஊரில் வேறு யாரிடமாவது பகை இருந்ததாக நான் விசாரித்தேனா? என்றால் விசாரித்தேன்.

சாட்சி உஷாதேவியின் விசாரணையின் அடிப்படையில் தான், எதிரிகளின் பெயர், விபரங்கள் தெரிய வந்தது. புகார்தாரர், 1வது எதிரியை ஏற்கனவே பார்த்துள்ளதாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார். ஏற்கனவே தெரிந்த எதிரியை அடையாளம் தெரியாத நபர் என்று புகாரில்

குறிப்பிட்டுள்ளார் என்றால் ஏற்கனவே ஒரு தடவை மட்டுமே புகார்தாரர், 1ம் எதிரியை பார்த்துள்ளார். நான் முறையாக புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் சொன்ன நாள், சொன்ன தேதியில் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள், நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், சான்று பொருட்கள் பின்யோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.01 18:55:38 +0530